2023 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

இந்திய திரையுலகின் புகழ்பெற்ற பின்னணிப் பாடகி திருமதி வாணி ஜெயராம் அவர்கள் 4–2–2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

வேலூர் மாவட்டத்தில் பிறந்து, தமது இனிமையான குரலாலும், இசை வல்லமையாலும் உலகம் முழுக்க புகழ்பெற்ற திருமதி வாணி ஜெயராம் அவர்கள் பல்வேறு மொழிகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி இரசிகர்கள் மனதில் நீங்கா இடம்பெற்றவர். மாநில விருதுகளையும் தேசிய விருதுகளையும் பெற்றதோடு, இந்த ஆண்டின் பத்மபூஷண் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், இசை இரசிகர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

TRUTH ALONE TRIUMPHS

3. தகவல் கோரல்

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிட்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெகன் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் இருங்கள்; உங்களுக்கு பிறகு பேச வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

கிருஷ்ணகிரி மாவட்டம், கிட்டம்பட்டியைச் சேர்ந்த ஜெகன் என்பவரும், முழுக்கான்கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இந்நிகழ்வு முக்கியமானது. இதை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்நிகழ்வு முக்கியமல்ல என்று நான் சொல்லவில்லை. இன்று காலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் இதுகுறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இதனை நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று அவரிடம் கூறினேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இதனை நீங்கள் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இது முக்கியமானது.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பதிவு செய்யுங்கள். பதிவு செய்து முடியுங்கள். நாளைக்கு எடுத்துக்கொள்வோம். நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *பதில் சொல்லலாம். இது பெரிய விஷயமே கிடையாது. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பார்கள்.*

கிருஷ்ணகிரி மாவட்டம், கிட்டம்பட்டியை சேர்ந்த ஜெகன் என்பவரும், முழுக்கான்கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த சரண்யா என்பவரும் மூன்று மாதங்களுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டனர். இரு நாட்களுக்கு முன்பு ஜெகன் என்பவர் டைல்ஸ் வேலைக்குச் செல்லும்போது, பெண்ணின் தந்தை மற்றும் அவரது உறவினர்கள் தருமபுரி–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில், பட்டப்பகலில் பொதுமக்கள் பலர் முன்னிலையில் ஜெகனை சரமாரியாக வெட்டி, கொடூரமான முறையில் கொலை செய்துள்ளனர். அந்த வழியாகச் சென்ற பலரால் இது செல்ஃபோனில் பதிவு செய்யப்பட்டு, சமூக வலைதளங்களில் ஒளிபரப்பப்பட்டு, நாடெங்கும் பெரும் பரபரப்பையும், பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

2023 மார்ச் 23] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

இச்சம்பவம் தொடர்பாக, அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் கேட்டார்கள். இதை நாளைக்கு எடுத்துக்கொள்வோம் என்றேன். இதை நீங்கள் இன்றைக்குப் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னதால், இது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாளைக்குப் பதில் சொல்வார்கள்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஓரிக்கை, குருவிமலை பகுதி, பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 10 பேர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் எழிச்சியூர் பகுதியில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்காக வருவதற்குக் காத்திருந்தோம். 12 மணி அளவில் மிக அதிர்ச்சிகரமான ஒரு செய்தி; காஞ்சிபுரம் மாவட்டம், குருவிமலை பகுதியில் பட்டாசுத் தொழிற்சாலையில் வெடி விபத்து ஏற்பட்டு 10 பேர் அகால மரணமடைந்திருக்கிறார்கள். பலர் இன்னும் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 'நீங்கள் வருகிறீர்களா' என்று கேட்டபோது, 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அங்கே விரைந்து செல்லச் சொல்லியிருக்கிறார்; நான் அங்கே செல்கிறேன்; உங்கள் நிகழ்ச்சியை இரத்து செய்யுங்கள்' என்று சொன்னார். இந்தப் பட்டாசுத் தொழிற்சாலை விபத்து எப்படி ஏற்பட்டது என்பதைப் பத்திரிகையிலும், தொலைக்காட்சியிலும் பார்த்தோம். சிவகாசி பகுதியில் பாதுகாப்பைக் கருதி பல ஏற்பாடுகளைச் சரியாகச் செய்திருக்கிறார்கள். நரேந்திரன் என்பவர் ஓர் அரசியல் பிரமுகர், அந்தத் தொழிற்சாலையை நடத்துகிறார். இப்படிப்பட்ட பகுதியில், அதுவும் குறைந்தபட்ச பாதுகாப்பு